**Sub Court, Eraniel**

O.S. No.29/2023
Date:23.03.2026.
DW1 - திருமதி. வசந்தம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
வாதி தரப்பில் குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி

இந்த வழக்கை வாதி தாக்கல் செய்வதற்கு முன்பு, நான் 18.06.2022 அன்று மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் வாதி மற்றும் அவருடைய தகப்பனாருக்கு எதிராக புகார் கொடுத்தேன் என்றால், சரிதான். அந்த புகாரில் முதல் பத்தியில் ரீசர்வே எண்.736/12ன் மொத்த விஸ்தீரணம் 5.50 ஏர் என்று நான் குறிப்பிட்டிருந்தேன் என்றால், சரிதான். அந்த 5.50 ஏரில் தான், எனது கணவரும், அவருடைய தம்பியின் மனைவி மற்றும் குழந்தைகளுக்கு இடையே 6.350 சென்ட் வீதம் பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள் என்றால், சரிதான். அந்த 5.50 ஏரின் மொத்த பரப்பளவு 13.585 சென்ட்கள் என்றால், சரிதான். அந்த 13.585 சென்ட்களில் தான் எனது கணவரும், அவருடைய தம்பி மற்றும் பிள்ளைகள் 6.350 சென்ட் வீதம் என்று எழுதி இருக்கிறார்கள் என்றால், சரிதான். அதில் மீதி 850 சதுர லிங்க்ஸ் தான் உள்ளது என்றால், தற்போதைய கிடப்பு 12.700 சென்ட் என்பதை அனுசரித்து நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டோம். நான் காவல் துறை கண்காணிப்பாளருக்கு எழுதிய புகாரில் தற்போதைய கிடப்பு பற்றிய விபரத்தை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். எனது கணவர் தாக்கல் செய்துள்ள பதிலுரையிலும், இவ்வாறு தற்போதையை கிடப்பை அனுசரித்து பாகப்பிரிவினை செய்து கொண்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், அது விபரம் எனக்கு நினைவில் இல்லை. பொதுவாக சொத்து வாங்கும் போதும், பாகம் செய்யும் போதும், அதில் உள்ள மரங்கள், வீடுகள் மற்றும் கட்டுமானங்கள் குறித்து எழுதுவார்கள் என்றால், சரிதான். வா.சா.ஆ.2ல் எனது கணவரும், அவருடைய தம்பி குடும்பத்தாரும் செய்து கொண்ட பாகப்பத்திரம் சொத்து விபரத்தில், மரங்களோ, கட்டுமானங்களோ, வீடு பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். 736/12ல் எனது கணவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் வீடு மரம் எதுவும் இல்லை என்பதால் தான் வா.சா.ஆ.2ல் அது பற்றி குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் புகைப்படத்தை பார்த்து என்னால், அடையாளம் காட்ட முடியுமா என்றால், அது ஏற்கத்ததக்கதல்ல என்று சாட்சி கூறுகிறார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு, எனது வீடு. அந்த வீட்டின் கதவு எண்.9/57. அந்த வீட்டில் தான் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக

குடிவசிக்கிறேன் என்றால், சரியல்ல. கடந்த 2, 3 ஆண்டுகளாக அதில் குடிவசிக்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மரங்கள், எங்கள் பங்கிற்கு ஒதுக்கப்ட்டவை தான். அந்த புகைப்படம் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த மரங்களுக்கு இடையே எந்த விதமான வீடும், கட்டுமானங்களும் இல்லை என்றால், இந்த புகைப்படத்தில் காட்டப்படவில்லை. அந்த சொத்தின் வடக்கு பக்கமாக உள்ள சொத்து எனது கணவரின் தம்பிக்கு ஒதுக்கப்ட்டது என்றால், சரிதான். அந்த இடத்தில் எனது கணவரின் தம்பி வீடு கட்டி குடும்பத்துடன் வசிக்கிறார் என்றால், சரிதான். நான் குறிப்பிடுவது போல பழுதடைந்த வீடோ, கட்டுமானங்களோ மரங்களுக்கு நடுவில் இல்லை என்றால், சரியல்ல. எந்த விதமான கட்டுமானங்களோ, வீடோ பட்டிகை சொத்தில் உண்மையில் இல்லாத நிலையில், நான் பஞ்சாயத்து தலைவர் பதவியில் இருந்ததால், அவ்வாறு போலியாக ஒரு கதவு எண் கொடுத்து வீட்டு வரி செலுத்தியதாக காண்பிக்கிறேன் என்றால், சரியல்ல. தற்போதைய கிடப்பு 12.700 சென்ட் என்று அளவீடு செய்து வரைபடம் தயார் செய்து, எங்களது பாகப்பத்திரத்தில் வரைபடம் இணைத்து இருக்கிறோம். நான் தாக்கல் செய்துள்ள மொத்த தாள்களில் எண்ணிக்கை பாகப்பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். அவ்வாறு எண்ணிக்கை குறிப்பிடுவது இல்லை. 2008 ல் பத்திரம் எழுதுவதற்கு முன்பாக எனது கணவர் அல்லது அவரது தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவோ அல்லது கரம் கட்டிய இரசீதுகளோ இணைக்கப்படவில்லை என்றால், 1980 ன் கரத்தீர்வை இரசீது ஒப்படைத்தேன். வாதியின் சொத்தை அபகரிக்கும் எண்ணத்துடன் என்னுடைய கணவர் மற்றும் அவருடைய தம்பி குடும்பத்தினர் போலியாக பாகப்பத்திரத்தை உருவாக்கினார்கள் என்றால், சரியல்ல. 1980 கரத்தீர்வை இரசீது எதனையும் நாங்கள் அந்த சமயத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. எனவே எங்களது பாகப்பத்திரத்தில், வாதியின் 2 சென்ட் இடத்தை பொறுத்து எழுதப்பட்ட விபரங்கள் இரத்து செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.